# 13 இறையாட்சியும் திருமுழுக்கு யோவானும்

இறையரசின் ஆரம்பம் குறித்து யூத மக்களுக்கு இறைவாக்கு உரைத்தவர் திருமுழுக்கு யோவான் ஆவார். வரப்போகும் மெசியா இவ்வுலகில் இறையாட்சியை நிலைபெறச் செய்வார் என்பதை பலஸ்தீன மக்களுக்கு பறைசாற்றினார்.

'பாலைநிலத்தில் குரல் ஒன்று முழங்குகின்றது; ஆண்டவருடைய வழியை ஆயத்தப்படுத்துங்கள்' என்று கூறி, இயேசுவின் திருப்பணிக்கு மக்களை ஆயத்தப்படுத்தினார்.

'இதோ என் தூதனை உமக்கு முன் அனுப்புகிறேன்; அவர் உமக்கு வழியை ஆயத்தம் செய்வார்.' (மாற்கு 1:2) என்று பழைய ஏற்பாட்டில் கூறப்பட்ட இறைவாக்கு யோவானின் திருப்பணியில் நிறைவேறியது. இறையரசின் நோக்கில் அமைந்த அவரின் சிந்தனைகளும் செயல்களும் அமைந்தன.

**தீங்கு நிறைந்த உலகில் மக்களை மனந்திரும்பும்படி அவர் அழைத்தார். இது அவரின் முக்கிய செய்தியாகும்.**

*"மனம் மாறுங்கள் ; ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது".*

இறையாட்சிக்குள் உட்புகும் மக்கள் மனம்மாற வேண்டும்; தூய வாழ்வை மேற்கொள்ள வேண்டும் என்று யோவான் நம்பினார். எனவே, தாமும் தூய்மையான வாழ்வை வாழ, நசரேய விரதத்தினை மேற்கொண்டார். அவரின் தூய வாழ்வினால் கவரப்பட்ட மக்கள் கூட்டத்தினர் தம் பாவங்களை அறிக்கை செய்யும்படி அவர் வாழ்ந்த பாலைநிலத்தில் யோர்தான் நதிக்கரைக்குச் சென்றனர். புறவினத்தவர் யூத சமயத்தை தழுவும் போது திருமுழுக்குப் பெறுவது அன்றைய கட்டாயமாகுக இருந்தது. இருப்பினும், யூத சமயத்தவரும் யோவானிடம் பாவங்களை அறிக்கையிட்டு திருமுழுக்குப் பெற ஆரம்பித்தனர். இவ்வாறான சூழ்நிலையிலேயே ஆண்டவர் இயேசுவும் யோவானிடம் திருமுழுக்குப் பெறச் சென்றார்.



**இவ்வாறு மனந்திரும்பும் மக்கள் நீதி, நியாயத்தின் அடிப்படையில் அமையும் வாழ்வை மேற்கொள்ள வேண்டும் என்பது அவரின் இரண்டாவது முக்கிய செய்தியாக அமைந்ததுடன்** மிகக்கடுமையானதாகவும் இருந்தது. அவரிடம் திருமுழுக்குப் பெறும்படி வந்த சதுசேயரினதும், பரிசேயரினதும் வெளிப்போக்கான ஆன்மீக வாழ்வைக் கடிந்து கொண்டார். அவர்களை 'விரியன் பாம்பு குட்டிகளே' என்று விபரித்தார். 'நீங்கள் மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்ற செயல்களால் காட்டுங்கள்' என்று அவர்களை எச்சரித்தார்.


இயேசுவின் வார்த்தைகளினால் குத்தப்பட்ட மக்கள் 'நாம் என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டார். அதற்கு யோவான் அளித்த பதில் அன்று புரட்சிகரமாய் அமைந்தது.

- ☞ இரண்டு அங்கிகளை உடையவர்கள் இன்னொருவரோடு பகிர்ந்து கொள்ளட்டும்.
- ☞ உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும்.
- ☞ வரிஅறவிடுவோர்கள் குறிக்கப்பட்ட தொகைக்கு மேல் அறவிட வேண்டாம்.
- ☞ (படைவீரர்கள்) நீங்கள் எவரையும் அச்சுறுத்திப் பணம் சம்பாதிக்காதீர்கள்.
- ☞ படைவீரர்களே, யார்மீதும் பொய்க்குற்றம் சுமத்தாதீர்கள்.

இவ்வாறு கூறி இறையரசின் வாழ்க்கை முறைகளை விளக்கினார். இன்று நமது வாழ்வின் சூழ்நிலைகளுக்கும் இவை எவ்வளவு பொறுத்தமானதாயுள்ளன என்பது நம்மை வியக்கச் செய்கின்றன.

**ஆட்சியாளரின் அறியாமையினை அஞ்சாது சுட்டிக் காட்டினார்.** ஏரோது அரசன் உரோம பேரரசின் அனுசரணையுடன் கலிலேயா பகுதியை ஆட்சி செய்தான். அவன் தன் சகோதரன் பிலிப்புவின் மனைவியுடன் கொண்டிருந்த முறையற்ற உறவை யோவான் கண்டித்து வந்தார். மக்களை ஆளும் யூத அரசன் யூத சமய, சமுதாயத்தின் அனைத்துச் சட்டங்களையும் கடைப்பிடிக்கும்படி எதிர்பார்க்கப்பட்டது. இதனால், ஏரோது யோவானை சிறையில் அடைத்து வைத்திருந்தான். யோவான் ஒரு இறைவாக்கினர் என்று மக்கள் நம்பியபடியால் அவரைக் கொலை செய்ய அஞ்சினான். எனினும் அவனுடன் பாவத்தில் வாழ்ந்த ஏரோதியாளின் சதியின் மூலம் யோவானைச் சிரச்சேதம் செய்வித்தாள். இறையாட்சியின் அடிப்படையில் அமைந்த அறவியல் விழுமியங்கள் இழிவுபடுத்தப்படுவதற்கு எதிராகச் செயல்பட்டமையால் யோவான் உயிரிழந்தார்.

## மனச்சாட்சியின் கைதிகள்



தம் சொந்த நலனையோ பாதுகாவலையோ பெரிதாகக் கருதாது, நீதி நியாயத்திற்கென போராடிய பலரைப் பற்றி தொடர்ந்து வரும் பாடங்களில் கற்போம்.

நீதியை நிலைநாட்டவும், அநீதிச் செயல்களுக்கெதிராகப் போராடவும், தம் மனச்சாட்சியினால் தூண்டப்பட்டு, அதனால் அதன்படி செயல்படுவதற்கு தடைசெய்யப்பட்ட நிலையில், அதற்கென துன்பங்களை ஏற்போரை **'மனச்சாட்சியின் கைதிகள்' என்**று அழைக்கின்றோம். அவர்கள் தம் மனசாட்சியின்படி நடந்து கொள்வதனால் பலவேளைகளில் சிறைவாசம் அனுபவிப்பதுண்டு.

தென் ஆபிரிக்க நாட்டில் கறுப்பின மக்கள் அண்மைக்காலம் வரை வெள்ளையின மக்களினால் ஒடுக்கப்பட்டு வந்தனர்.அங்கு கறுப்பின மக்களின் சமத்துவத்திற்கான நியாயமான அகிம்சைப் போராட்டத்தை மேற்கொண்டு வந்தவர் நெல்சன் மண்டேலா ஆவார். அவர் 28 வருடங்களாகத் தொடர்ந்து சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். பலமுறை அவர் தமது போராட்டத்தைக் கைவிடின் விடுதலை பெறலாம் என்று வெள்ளை ஆட்சியாளரினால் அறிவுருத்தப்பட்டார். எனினும் ஆபிரிக்காவின் கறுப்பு மக்களின் விடுதலைக்காக தனது வாழ்வின் முக்கிய காலப் பகுதியை தொடர்ந்து சிறையிலேயே கழித்தார். இறுதியில் தென்ஆபிரிக்க மக்கள் விடுதலை பெற்றனர்.

இன்றும் பல வருடங்களாக எதிர்கட்சி தலைவரான ஆங்சாங்சூக்கி என்னும் பெண் இராணுவ ஒடுக்குமுறை ஆட்சியினருக்கெதிராகத் தன் போராட்டத்தைக் கைவிட மறுத்து, மியான்மார் (பர்மா) நகரில் வீட்டுக்காவலில் சிறை வைக்கப்பட்டுள்ளார். இவர் போன்றவர்கள் பிறருக்காகத் தம் வாழ்வைத் தியாகம் செய்வதன் மூலம் முன்மாதிரியாக திகழ்ந்தார்.

மனனம் செய்வோம்

“நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர். ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது”

*மலைப்பொழிவில் மத் 5:10*

**செயன்முறை**

1. “இறையரசு இவ்வுலகில் நிலைபெற வேண்டும். மக்கள் அதன் விழுமியங்களுடன் இவ்வுலகில் வாழ வேண்டும்” இந்த உண்மையை யோவான் எடுத்துக் காட்டும் காட்சியை செய்யுள் அல்லது சித்திரம் மூலம் விளக்கவும்.

2. “இறையரசின் விழுமியங்கள் இன்றும் நம் வாழ்விற்கு ஏற்புடையன” இதனை உறுதிப்படுத்தும் விதத்தில் இன்றைய உலகின் தேவைகளைப் பற்றிச் சிந்தித்து குழுவாக உரையாடி பட்டியல் தயாரிக்கவும்.

**செயற்பாடு**

1. மனச்சாட்சியின் அடிப்படையில் ஒருவர் மேற்கொண்டுவரும் சிறைவாழ் போராட்டத்தின்போது அவர் மனதில் பல உளப் போராட்டங்கள் ஏற்படுவது இயல்பு. அந்நிலையில் எழக்கூடிய சில சிந்தனைகளைக் குறிக்கவும்.

2. “திருமுழுக்கு யோவான் இன்று நம் நாட்டுக்கு வந்தால்......” இத்தலைப்பில் 500 சொற்கள் கொண்ட சிறு கட்டுரை எழுதவும்.